1982 மார்ச் 30]

(முற்பகல் 10-10)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பத்திரிகைகளிலே எல்லாம் வந்திருக்கிறது. இனிமேல், இந்தக் குறிப்பை மாற்றி, நான் மட்டும்தான் படிக்க வேண்டும். (சிரிப்பு)

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதை நான் ஒரு வேடிக்கை குறிப்பாகத்தான் சொன்னேனே தவிர, எந்தத் தனிப்பட்ட உறுப்பினரையும் குறை சொல்ல வேண்டுமென்றோ அல்லது குற்றம் சாட்ட வேண்டுமென்றோ அல்ல. அப்படிப்பட்ட எண்ணம் எக்காரணம் கொண்டும் வெளியிலே இருப்பவர்களுக்கு வரக் கூடாது என்ற நோக்கத்திலே சொன்னேனே தவிர யாரையும் குறிப்பிட்டுச் சொன்னேன் என்று எடுத்துக் கொள்ள வேண்டாம். அது வேடிக்கையாகச் சொல்லப்பட்ட ஒன்றுதான்.

(3) தகவல் கோரல்

உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிப்புகள்

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையில் நடந்த நிகழ்ச்சிகளின் ஒரு பகுதியைச் சொல்லாததற்கே வானொலி மீது உரிமைப் பிரச்னை அனுமதிக்கப்பட்டு, அதற்கு வானொலி வருத்தம் தெரிவித்து இருக்கிறது. ஆனால்.......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உரிமைப் பிரச்னை பற்றி அறையில் வந்து கேளுங்கள், நான் பதில் சொல்கிறேன்.

திரு. ஏ. சி. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே,

* * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சண்முகம் பேசியது அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்பெறுகிறது.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றம் கூடுகின்ற இந்த நேரத்திலே தமிழகத்திலே மேலெழுந்த பல முக்கிய சம்பவங்கள் பற்றி நாங்கள் பல ஒத்தி வைப்புத் தீர்மானங்கள் கொடுத்திருக்கிறோம். ஆனால், வழக்கமாகவே பெரும்பாலும் அவைகள் எல்லாம் தள்ளுபடி செய்யப்படுகின்றன என்று வருகின்றன. இன்றைக்கு நீங்கள் சொன்னதிலிருந்து நான் புரிந்துகொள்வது, இன்றைக்குப் பதட்ட நிலையே இல்லை..........

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நல்லவேளையாக இன்றைக்குப் பதட்ட நிலை இல்லை.

திரு. என். எஸ். வி. சித்தன் : ஒன்றாவது எடுத்துக் கொள்ளுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினருக்கு ஒன்றை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். உறுப்பினர்கள் அனுப்பிய சிலவற்றின் பொது முக்கியத்துவம் காலத்தின் காரணமாக இழந்து விடுகிற காரணத்தால், சிலவற்றைத் தள்ளுபடி செய்ய வேண்டியதாக இருக்கிறது. சிலவற்றிற்கு அரசிடமிருந்து பதில் கேட்டு வராமல் இருப்பதன் காரணமாக இங்கே எடுக்கப்படாமலிருக்கிறது. தினசரி ஒரு ஒத்தி வைப்புத் தீர்மானம் எடுத்துக் கொண்டுதானிருந்தேன். இன்றைக்குத்தான் எடுத்துக் கொள்ள முடியவில்லை. காரணம், என்னிடத்திலே பதில் எதுவும் இல்லை. (குறுக்கீடு) பதிலை வாங்கித் தருவதற்கு நான் தயாராக இருக்கிறேன். அதற்கான முயற்சியை நான் மேற்கொண்டிருக்கிறேன். நாளையிலிருந்து ஏதாவது ஒரு பிரச்னையைப் பற்றி ஒத்தி வைப்புத் தீர்மானம் எடுத்துக் கொள்வதாக இருக்கிறேன்.

திரு. ஏ. இராமலிங்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, சென்னைப் பல்கலைக் கழகத்திற்கு செமஸ்டர் தேர்வுக்குப் பணம் கட்டுவதற்குக் கடைசி நாள் அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் 5-வது செமஸ்டர் தேர்வு.................

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பல்கலைக் கழகம் தனிப்பட்ட 'பாடி'. அது இங்கே இந்த நேரத்திலே வராது. 'செமஸ்டர்' எல்லாம் இங்கே வராது, இங்கே கேட்க முடியாது, பல்கலைக் கழகத்தைக் கேட்க வேண்டும்.

திரு. என். வி. என். சோமு : பேரவைத் தலைவர் அவர்களே, பல்கலைக் கழக முடிவினால் 40,000 மாணவர்கள் பாதிக்கப்படக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. இது மிகமிக அவசரமான பிரச்னை. எல்லோரும் கொடுத்திருக்கிறார்கள். அதை அவசியம் எடுத்துக் கொள்ள வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதை எடுத்துக் கொள்கிறேனா, இல்லையா என்று பாருங்கள் ; பிறகு கேளுங்கள்.